


**22.05.2025**

**தலைப்பு செய்திகள்**

1. அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் 103 மேம்படுத்தப்பட்ட ரயில் நிலையங்களை பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

பாரம்பரிய கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் இந்த ரயில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

2. தமிழ்நாட்டில் ரயில்வே நவீன மயம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு நடப்பாண்டில் ஆறாயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் இலவச மின்சார சலுகைகள் தொடரும் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் கூறியுள்ளார்.

4. கிழக்கு மத்திய அரபிக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவானதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு கிடாம்பி ஸ்ரீகாந்த் முன்னேறியுள்ளார்.

**இனி விரிவான செய்திகள்**

***********

**பிரதமர்**

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் சாதனை அளவாக ரயில் கட்டமைப்பு பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு ஆயிரத்து 300 ரயில் நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் பெக்கானேரில் 26 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை இன்று துவக்கிவைத்த பிரதமர் அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் 103 மேம்படுத்தப்பட்ட ரயில் நிலையங்களையும் நாட்டிற்கு அர்ப்பணித்து உரையாற்றினார்.

நவீன வசதிகளுடன் பாரம்பரிய கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையிலும் பயணிகளின் பாதுகாப்பு வசதிகளை உள்ளடக்கியும் இந்த ரயில்நிலையங்கள் உருவாக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

வளர்ச்சி அடைந்த பாரத பாதையில் நவீன கட்டமைப்பு பணிகள் முழு வீச்சில் நடைபெறுவதாக கூறிய அவர் இதற்காக 6 மடங்கு நிதி கூடுதலாக செலவிடப்படுவதாக எடுத்துரைத்தார்.

நாட்டின் ரயில்வே இணைப்புகள் நவீனமயமாக்கப்பட்டு வந்தேபாரதம், அம்ரித் பாரதம் நமோ பாரத் ரயில்கள் இயக்கப்படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர் இவை நாட்டின் வளர்ச்சியையும் அதிவேகத்தையும் பறைசாற்றுவதாக குறிப்பிட்டார்.

**முன்னதாக பேசிய மத்திய ரயில்வே அமைச்சர்** திரு.அஷ்வினி வைஷ்ணவ் சுதந்திரத்திற்கு பின்னர் சிறிய ரயில் நிலையங்களின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்திய நாட்டின் முதல் பிரதமர் திரு.நரேந்திரமோடி என்று பாராட்டியுள்ளார்.

**செங்கல்பட்டு மாவட்டம் பரங்கிமலை** மேம்படுத்தப்பட்ட ரயில் நிலைய விழாவில் இன்று உரையாற்றிய மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான அரசு நாடுமுழுவதும் ரயில் நிலைய மேம்பாட்டு பணிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ததாக கூறினார்.

தமிழகத்தில் மட்டும் ரயில்வே நவீனமயம் உள்ளிட்ட பணிகளுக்கு ஆறாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வரலாற்று சிறப்புமிக்க பாம்பன் ரயில்வே பாலப்பணிகள் நிறைவு பெற்றதை எடுத்துரைத்த அவர் அதிவேக புல்லட் ரயில் இயக்கம் இன்னும் 6 மாதங்களில் மும்பை மற்றும் அஹமதாபாத் இடையே தொடங்க இருப்பதாக எடுத்துரைத்தார்.

ரயில் தளவாட பொருட்களை ஏற்றுமதி செய்யும் அளவிற்கு நம் நாடு வளர்ச்சி பெற்றிருப்பதாக எடுத்துரைத்தார்.

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் தெற்கு ரயில்வேயின் 13 ரயில்நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாகவும் இதில் 9 ரயில் நிலையங்கள் தமிழகத்தை சேர்ந்தது என்றும் அமைச்சர் கூறினார்.

**எல். முருகன் வாய்ஸ்**

ஸ்ரீரங்கம், சிதம்பரம், குழித்துறை, மன்னார்குடி, போளூர், பரங்கிமலை, திருவண்ணாமலை, விருதாச்சலம், சாமல்பட்டி, ஆகிய 9 மேம்படுத்தப்பட்ட ரயில் நிலையங்கள் இன்று பயன்பாட்டிற்கு வந்துள்ளன.

ஸ்ரீரங்கம் ரயில்நிலைய துவக்க விழாவில் பங்கேற்ற திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் திரு.அன்பழகன் பேசுகையில்:

---**வாய்ஸ்**

***********

**பிரதிநிதிகள் குழு**

ஆபரேசன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மற்றும் பாகிஸ்தானின் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய ஜனதாதள் மக்களவை உறுப்பினர் திரு. **சஞ்சய் குமார் ஜா** தலைமையிலான அனைத்துகட்சி பிரதிநிதி குழுவினர் இன்று ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் முக்கிய தலைவர்களிடம் எடுத்துரைத்தனர்.

பாகிஸ்தானின் தீவிரவாத ஆதரவால் பிராந்திய சர்வதேச பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்தும் அவர்கள் விரிவாக விளக்கம் அளித்தனர்.

இந்நிகழ்வில் பங்கேற்றவர்கள் தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு தங்களது ஆதரவை முழுமையாக தெரிவித்துள்ளனர்.

முன்னதாக சமூக வலைதள பதிவில் இதுகுறித்து தெரிவித்த **திரு.ஜா** ஆபரேசன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம் தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் பூஜ்ஜிய சகிப்பு தன்மை அணுகுமுறை மற்றும் அமைதி மற்றும் ஜனநாயக மதிப்பீடுகளில் இந்தியாவும் ஜப்பானும் இணைந்து நிற்பது குறித்து குறிப்பிட்டுள்ளார்.

**சிவசேனா கட்சியின் திரு.ஸ்ரீகாந்த் ஷிண்டே** தலைமையிலான அனைத்து கட்சி குழு 4 நாடுகள் பயண திட்டத்தின் கீழ் ஐக்கிய அரபு அமீரகம் சென்றடைந்துள்ளது.

சர்வதேச சமூகத்தினரிடம் தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடுகள் குறித்து இக்குழு எடுத்துரைக்க உள்ளது.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.கனிமொழி கருணாநிதி தலைமையிலான 3-வது அனைத்து கட்சி குழு இன்று மாஸ்கோ புறப்பட்டுச்சென்றுள்ளது.

இக்குழு ஸ்பெயின், கிரீஸ், ஸ்லோவேனியா, லாட்வியா ரஷ்யா நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள உள்ளது.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய திருமதி கனிமொழி தீவிரவாதத்தால் ஏற்படும் இழப்புகள் குறித்து உலக நாடுகளிடம் எடுத்துரைப்பதோடு, பயங்கரவாதத்திற்கு எதிராக அனைவரும் ஒருங்கிணையவேண்டும் என்று வலியுறுத்த உள்ளதாக குறிப்பிட்டார்.

எஞ்சிய 4 குழுவினரும் வரும் நாட்களில் வெவ்வேறு நாடுகளில் பயணம் மேற்கொள்கின்றனர்.

மத்திய அரசு அமைத்துள்ள அனைத்து கட்சி பிரதிநிதிகளை உள்ளடக்கிய 7 குழுவினரும் 32 நாடுகளில் பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு குறித்து எடுத்துரைக்க உள்ளனர்.

***********

**சிவசங்கர்**

தமிழகத்தில் இலவச மின்சார சலுகைகள் தொடரும் என்று மாநில போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூரில் இன்று எமது செய்தியாளரிடம் பேசிய அவர் வீட்டு மின் இணைப்புகளுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லை என்று கூறியுள்ளார்.

மின் கட்டண உயர்வு குறித்து தற்போது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் எவ்வித உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றார்.

எனினும் ஆணையம் இதுதொடர்பான அறிவிப்பை வெளியிடும்போதும் தற்போதைய நிலைமையே தொடர வேண்டும் என முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

***********

**மனோ தங்கராஜ்**

தமிழ்நாட்டில், ஆவின் பால் கொள்முதலை தினந்தோறும் 40 லட்சம் லிட்டராக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

கோவையில் செய்தியாளரிடம் பேசிய அவர், ஆவின் பால் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகாரை சரிசெய்ய வாட்ஸ்-அப் குழு அமைத்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

பல்வேறு நடவடிக்கைகளால், ஆவின் பால்வளத்துறை வளர்ச்சிபெற்றுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

***********

**நயினார் நாகேந்திரன்**

தமிழ்நாட்டில் திமுக அரசை வீழ்த்த அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் தேர்தல் வாக்குறுதியில் அறிவித்த பெரும்பாலான திட்டங்களை திமுக தலைமையிலான மாநில அரசு நிறைவேற்றவில்லை என குற்றம் சாட்டியுள்ளார்.

சொத்து வரி உயர்வு, மின் கட்டண உயர்வு போன்றவற்றால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக குறை கூறியுள்ளார்.

தங்க நகை அடகு தொடர்பான விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் சிக்கல் இல்லாமல் நடைமுறைக்கு வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

***********

**நாகை மீனவர்கள்**

நாகை மாவட்டம் செருதூரில் இருந்து கடலில் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியதோடு, அவர்களிடமிருந்த ஜி.பி.எஸ்.கருவிகளையும் இதர பொருட்களை பறிமுதல் செய்தனர்.

கடலோர காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

***********

**இருவரி**

**அரியலூர் மாவட்டத்தில் ஆபரேசன் சிந்தூர்** நடவடிக்கையை அடுத்து ராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் பிஜேபி சார்பில் தேசிய கொடியை ஏந்தி ஊர்வலம் இன்று நடைபெற்றது.

**மதுரையில் பள்ளி வாகனங்களின் நிலை** குறித்த வருடாந்திர ஆய்வு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சங்கீதா தலைமையில் இன்று நடைபெற்றது.

வட்டார போக்குவரத்து அலுவலர்கள் இதில் பங்கேற்றனர்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் தொடக்க கல்வி** ஆசிரியர் பட்டப்படிப்பு பயில விரும்புவோர் வரும் 26ஆம் தேதிமுதல் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் திரு.ராமராஜ் தெரிவித்துள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறும் சாலை** பணிகளை தரமானதாகவும் விரைந்து முடிக்கவும் ஒப்பந்த தாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

***********

**ஈரோடு வாய்ஸ்**

ஈரோடு மாவட்டம், திம்பம் மலைப்பகுதியில் சிறுத்தைகள் நடமாட்டம் அதிகரித்துள்ளதால், வாகன பயணிகள் கீழே இறங்க வேண்டாம் என வனத்துறை அறிவுறுத்தியுள்ளதாக **எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.**

**--- வாய்ஸ் ---**

***********

**ஏர்வாடி**

ராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி தர்காவின் 851ஆம் ஆண்டு சந்தனக்கூடு விழா இன்று அதிகாலை வெகுவிமரிசையாக நடைபெற்றது.

சந்தனக்கூடு விழாவை ஒட்டி ராமநாதபுரம் மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

***********

**வானிலை**

கிழக்கு மத்திய அரபிக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவானதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது வடக்கு நோக்கி நகர்ந்து அடுத்த 36 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வுமண்டலமாக வலுப்பெறக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

இதனிடையே தேனி தென்காசி திருநெல்வேலி கன்னியாகுமரி நீலகிரி கோவை திருப்பூர் மாவட்டங்களி அடுத்த சில மணி நேரங்களில் மிதமானது முதல் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

***********

**பேட்மிண்டன்**

கோலாலம்பூரில் நடைபெறும் மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு கிடாம்பி ஸ்ரீகாந்த் முன்னேறியுள்ளார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் துருவ் கபிலா டனிஷா கிறாஸ்டோ இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**